2.3.2026

<u>அ.வ.எண்.94/2019</u>

பி.வா.சா.1 சுகதேவ் த/பெ. ராஜரத்தினம்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

முதல் வாதியின் கணவர் விஜயரத்தினம், எனது தகப்பனார் ராஜரத்தினம் ஆகியோர் சகோதரரர்கள் என்றால் சரிதான். முதல் பிரதிவாதி எனது பாட்டி ஆவார். 4 மற்றும் 6 பிரதிவாதிகள் எனது உடன்பிறந்த சகோதரிகள் ஆவார்கள். 5ம் பிரதிவாதி எனது தாயார் ஆவார். கனகடையாச்சி என்பவர் எனது தந்தை வழி பாட்டனார் ஆவார். தாவா சொத்துக்கள் கனகடையாச்சியின் சுயார்ஜித சொத்துக்கள் என்றால் சரிதான்.

முதல் வாதி தனக்காகவும் தனது மைனர் மகள் காயத்திரி என்பவருக்காகவும் எழுதிக் கொடுத்த வா.சா.ஆ.1 ஆவணம் எங்கு ஏற்பட்டது என்றால் மங்களபுரத்தில் உள்ள வீட்டில் எழுதப்பட்டது. அந்த ஆவணம் ஏற்பட்ட போது முதல் வாதியின் கணவர் இறந்து விட்டார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ஆவணத்திற்கு யார் வாசகங்கள் சொல்லி எழுதப்பட்டது என்றால் அப்போது நான் மைனராக இருந்ததால் எனக்கு தெரியாது. பாகபாத்திய விடுதலை பத்திரத்தில் என்ன எழுதப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது. எனது பெற்றோர் சொல்லி தான் தெரியும்.

முதல் வாதி சேலத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். அவரது உறவினர்கள் சேலத்தில் உள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ஆவணம் ஏற்பட்டபோது முதல் வாதியின் உறவினர்கள் வந்திருந்தார்களா என்றால் தெரியாது. பாகபாத்திய விடுதலை பத்திரம் என்ன நோக்கத்திற்காக எழுதப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது.

முதல் வாதி என்ன படித்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. பாகபாத்திய விடுதலை பத்திரத்தின் விவரங்களை முதல் வாதி படித்து பார்த்தாரா என்றால் அதுபற்றி எனக்கு நேரடியாக தெரியாது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்களை எனது பெற்றோர்கள் எனக்கு சொல்லியதின் அடிப்படையில் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

கனகபடையாச்சி முதல் வாதியின் மகளுக்கு ஒரு ஏற்பாடு செய்யவேண்டும் என்பதற்காக ஆவணத்திலர் கையொப்பம் இடுமாறு சொன்னதன் அடிப்படையில் முதல் வாதி வா.சா.ஆ.1 ஆவணத்தில் கையொப்பம் செய்தார் என்றால் சரியல்ல. முதல் வாதிக்கு பாகபாத்திய விடுதலை பத்திரத்தில் கண்டுள்ள சங்கதிகள் எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 பத்திரத்தில் பாகபாத்திய விடுதலைக்காக ரூ.75,000/- தொகை கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. அந்த பத்திரத்தில் மைனருக்கு தொகை வைப்பீடு செய்யப்பட்டதா என்றால் மொத்தமாக நேரடியாக தொகை கொடுக்கப்பட்டது.

பாகபாத்திய விடுதலை பத்திரத்தை பொறுத்து முதல் வாதிக்கு எதுவும் தெரியாது என்றும் அதனால் அந்த ஆவணம் இந்த வாதியை எந்தவகையிலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பாகபாத்திய விடுதலை பத்திரம் உண்மையாக ஏற்படவில்லை என்றும், வாதிகளை ஏமாற்றி பெறப்பட்ட ஆவணம் என்றும் அதன் அடிப்படையில் ஏற்படுத்திக் கொண்ட பாகபிரிவினை பத்திரம் செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல.

தாவா நிலுவையில் இருந்தபோது முதல் பிரதிவாதி இறந்து விட்டதால் தாவா சொத்துக்களில் இந்த வாதிகளுக்கு 3ல் ஒருபங்கு உரிமையுள்ளது என்றால் சரியல்ல. தாவாவில் 3ல் ஒருபங்கு வாதிகளுக்கு உரிமையுள்ளது என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Sd/- S. Sugadev

Taken down before/by me in/ open court and read over/ interpreted/
to the witness and acknowledge/ by him/ her to be correct.

Sd/- xxxxxxxxxx.
Sub Judge, Rasipuram.